# தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)
# Tamil Catholic Association (UK)

**PO BOX 1073 Wembley HA0 9JD**

Patron: His Lordship Rt. Revd. Dr. Justin Bernard Gnanapragasam
Bishop of Jaffna

Chairperson
**Mr Roche Nicholas Xavier**
+44(0)7502329370

Secretary
**Mrs Mary Francisca Francis**
+44(0)7949226291

Treasurer
**Mr Emmanuel Bastiampillai**
+44(0)7814105355

www.tca-uk.org tcauk@hotmail.co.uk UK Tamil Catholic Association
Registered Charity Number: 1124627


தமிழ் கத்தோலிக்க(ஐ.இ)ஒன்றியத்தின் அன்பான அங்கத்தவ உறுப்பினர்கள்,நலன்விரும்பிகள் அனைவரையும் இறை இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களையும்,வணக்கங்களையும் ஒன்றியமானது தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.இக்கட்டான பொருளாதார வாழ்க்கை செலவு நெருக்கடி மத்தியிலும் உங்களின் அன்பளிப்பை எண்ணி ஒன்றியமானது உங்களையும்,உங்கள் அன்பானவர்களையும் நினைவு கூர்ந்து பிராத்திக்கின்றது.

மேலும் இவ் ஒன்றியமானது இச் சவால் நிறைந்த சூழ்நிலையிலும் எமது தாயகத்தில் துன்பப்படும்ஆதரவற்ற சிறுவர்களின் பராமரிப்பு பணியை களைப்பின்றி அயராது தொடர்ந்து செய்து வருகின்றது.கடந்த 18 வருடங்களாக எமது தாயகத்தில் உள்ள ஆதரவற்ற சிறுவர்கள்,வயோதிபர்கள்,மாற்றுத்திறனாளிகள் கல்வியில் பின்தங்கியோர் போன்றவர்களின் துயர்துடைத்து ஒளிமயமான எதிர்காலத்தையும்,தன்னம்பிக்கையையும் வளர்த்து வருகின்றது.

2022-2023 காலகட்டத்தில் தாயகத்தில் உள்ள நான்கு மறைமாவட்டங்களுக்கு அவ் மறைமாவட்ட ஆயர்களுக்கூடாக 13,700 ஸ்ரேலிங் பவுண்களை(5.5 மில்லியன் LKR) நன்கொடையாக அனுப்ப முடிந்துள்ளது. யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திற்கு [நான்கு ஆதரவற்ற பராமரிப்பு நிலையங்களுக்கும்] மன்னார் மறைமாவட்டத்திற்கு [நான்கு ஆதரவற்ற பராமரிப்புநிலையங்களுக்கும்] திருகோணமலை மறை மாவட்டத்திற்கு ஒரு பராமரிப்பு நிலையத்திற்கும், மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு ஒரு பராமரிப்பு நிலையத்திற்குமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எம் ஒன்றியமானது கடந்த 18 வருடங்களில்(2005-2023) 56.3 மில்லியன்LKR,(5.6கோடிLKR) நன்கொடையாக எம்தாயகத்தின் தமிழ் மறைமாவட்ட ஆயர்களுக்கூடாக பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி உள்ளது.இதற்கு காரணமானவர்கள் நீங்களே.இப்பொருளாதார நெருக்கடியிலும் உங்கள் தன்னலமற்ற இதய பூர்வமான அன்பளிப்பும்,ஆதரவும் என்றால் மிகையாகாது.அது பாராட்டப் பட்டு போற்றப்படத்தக்கது.

மேலும் தொடர்ந்தும் எம் ஒன்றியத்தின் உன்னதபணி உயிர்ப்புடன் இயங்கவும்,இறைஆட்சியின் விழுமியங்கள் நம் வாழ்வில் மிளிர்வதற்கும்,உங்களின் இதய பூர்வமான ஆதரவையும் பங்களிப்பையும் ஒன்றியம் எதிர்பார்த்து நிற்கின்றது.

இறை இயேசுவின் அன்பும் ஆசீர்வாதங்களும் உங்கள் மீதும்,உங்கள் குடும்பத்தினர் மீதும் நிறைவாக கிடைப்பதாக.

நன்றி.

நிர்வாகக் குழு
தமிழ் கத்தோலிக்க ஒன்றியம்(ஐ.இ)